**ஜூன் – 18**

# TNPSC துளிகள்

- கொல்லிமலை காபி மற்றும் கொல்லிமலை பலாப்பழத்திற்கு புவிசார் குறியீடுகள் (GI) கோரி தமிழ்நாடு அரசு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்துள்ளது.
- சென்னையில் கருடா ஏரோஸ்பேஸ் என்ற ஒரு நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் வேளாண்சார் ஆளில்லா விமான உள்நாட்டுமயமாக்கல் மையம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- துணை படைத் தளபதியான யஷஸ்வி சோலங்கி இந்தியக் குடியரசுத் தலைவரின் மெய்க்காப்பாளராக (ADC) நியமிக்கப்பட்டதன் மூலம் இந்தப் பதவியை வகிக்கும் இந்தியக் கடற்படையினைச் சேர்ந்த முதல் பெண் அதிகாரி என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- இந்திய விமானப்படை மற்றும் அமெரிக்க விமானப் படையானது உத்தரப் பிரதேச மாநிலத்தின் சந்தினகரில் முதல் முறையாக "Tiger Claw" எனப்படும் ஒரு கூட்டுச் சிறப்பு நடவடிக்கைப் பயிற்சியினை நடத்தின.
- இந்தியாவிற்கும் பிரான்சுக்கும் இடையிலான 8வது சக்தி - 2025 எனும் கூட்டு ராணுவப் பயிற்சியானது பிரான்சில் நடைபெற உள்ளது.
- தென்னாப்பிரிக்கா அணியானது, லண்டனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் (WTC) இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியினை வீழ்த்தி 27 ஆண்டுகளுக்குப் பிறகு தனது முதல் ICC பட்டத்தினை வென்றுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம்





- முதலமைச்சர் விரைவில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- இதன் கீழ், மாநிலம் முழுவதும் 1,256 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.
- இது மாற்றுத் திறனாளிகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்கு அருகிலேயே முதன்மை சுகாதாரப் பரிசோதனைகளைப் பெறுவதை எளிதாக்கும்.
- இந்த முகாம்களில், மாற்றுத் திறனாளிகள் அவர்களின் மாற்றுத் திறனாளி சதவீதச்

சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டைகளைப் பெறலாம்.

- இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் நடைபெறும் இந்த முகாம்களில் புற்றுநோய் மீதான பரிசோதனைகளும் செய்யப்படும்.


## கட்டாய சிறு கடன் வசூலிப்பு




- மாநில அரசானது, தமிழ்நாடு 2025 ஆம் ஆண்டு கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் (கடும் கட்டாய நடவடிக்கைகளைத் தடுக்கும்) சட்டத்தினை அறிவித்துள்ளது.
- இது கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் சிறு கடன்களை கட்டாயமாக வசூலிப்பதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டமானது ஏப்ரல் மாதத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஜூன் 09 ஆம் தேதியன்று ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றது.
- இந்தச் சட்டமானது, நலிவடைந்த மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் தனிநபர்களை மிகக் குறிப்பாக விவசாயிகள், பெண்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தமிழ்நாட்டில் செயல்படும் சிறு கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் போன்ற கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் கடன்களைக் கட்டாயமாக வசூலிப்பதில் இருந்து பாதுகாப்பு வழங்குகிறது.
- கடன் வாங்குபவருக்கு எதிரான கட்டாய/அராஜக வசூலிப்பு நடவடிக்கை தொடர்பான சட்டத்தின் விதிகள் ஆனது, இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களுக்குப் பொருந்தும்.
- சிறுகடன் என்பது 3 லட்சம் வரையிலான ஆண்டு வருமானம் உள்ள ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் கடனைக் குறிக்கிறது.
- ஒரு குடும்பம் என்பது கணவன், மனைவி மற்றும் அவர்களின் திருமணமாகாத மகன் மற்றும் மகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு தனிப்பட்ட குடும்ப அலகாகும்.
- கடன் வாங்குபவர் என்பவர் ஒரு தனிநபர் அல்லது தனிநபர்களின் குழு அல்லது ஒரு சுய உதவிக் குழு அல்லது கூட்டுப் பொறுப்புக் குழுவைக் குறிக்கிறது.
- இந்தச் சட்டத்தின் 20வது பிரிவானது, ஒரு கட்டாய வசூல் நடவடிக்கை எது என்பதையும்

பட்டியலிடுகிறது.

## அடையாறு கழிமுகச் சதுப்பு நிலங்களின் புத்துயிர்ப்பு நடவடிக்கை





- அடையாறு கழிமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட சதுப்புநிலங்களின் புத்துயிர்ப்பு குறித்த நடவடிக்கைகள் ஆனது கணிசமான அளவு கார்பனைப் பிரித்தெடுத்து சேமித்துள்ளன.
- இந்தச் சதுப்புநிலங்கள் ஆனது சுமார் 1,195 டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான வருடாந்திர கார்பன் பிரித்தெடுத்தல் விகிதத்தை அடைந்துள்ளன.
- காடு வளர்ப்பு இயக்கம் ஆனது, 2008 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சென்னை நதிகள் புத்துயிர்ப்பு அறக்கட்டளையால் மேற்கொள்ளப்பட்டது.
- இது வரையில் ஆறு இனங்களைக் கொண்ட இச்சதுப்பு நிலச் சுற்றுச்சூழல் அமைப்பு ஆனது 2,288 டன் கார்பன் அல்லது 8,397 டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான ஒரு உமிழ்வைச் சேமித்துள்ளது.
- மேலும், இச்சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்பு ஆனது ஆண்டிற்கு 325.71 டன் கார்பன் பிரித்தெடுத்தல் விகிதத்தைக் கொண்டுள்ளது.

## முதலமைச்சரின் சுகாதாரக் காப்பீட்டுத் தரவு

- கடந்த நான்கு ஆண்டுகளில், சுமார் 81 லட்சத்திற்கும் அதிகமான திட்டப் பயனாளிகள் முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 5,878 கோடி ரூபாய் மதிப்புள்ள இலவச சிகிச்சையைப் பெற்றனர்.
- அவச ரகால 'இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம்' முன்னெடுப்பு ஆனது 648.12 கோடி ரூபாய் செலவில், விபத்தினால் பாதிக்கப்பட்ட 7.4 லட்சம் நபர்களைக் காத்தது.
- அரசாங்கமானது சுமார் 54 லட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சுமார் 31.75 லட்சம் தாய்மார்களுக்கு சுமார் 1,149.24 கோடி ரூபாய்கள் மதிப்பு கொண்டுள்ள ஊட்டச்சத்துத் தொகுப்புகளை விநியோகித்துள்ளது.
- கிண்டியில் இந்தியாவின் இரண்டாவது தேசிய முதியோர் மையத்திற்காகச் செலவிடப் பட்ட 151 கோடி ரூபாயுடன் சேர்த்து, மாநிலத்தில் 1,046 கோடி ரூபாயில் ஐந்து புதிய மருத்துவமனைகள் நிறுவப்பட்டன.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஆனது, 200 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வீடு தேடி சுகாதாரப் பராமரிப்பை வழங்கியது.

- பள்ளிகள் வாரியான ஒரு பார்வைத் திறன் ஆய்வுத் திட்டம் மூலம் சுமார் 13.11 லட்சம் குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடிகள் வழங்கப் பட்டன.
- 28 என்ற தேசிய சராசரிக்கு எதிராக, தமிழ்நாடு மாநிலத்தின் குழந்தை உயிரிழப்பு விகிதமானது (IMR) 1,000 பிறப்புகளுக்கு 8 ஆகக் குறைந்துள்ளது.
- கிராமப்புற மருத்துவம், காசநோய் ஒழிப்பு மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட வகையில் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கியதற்காக மாநில அரசு 545 விருதுகளைப் பெற்றது.




# தேசியச் செய்திகள்

## ஜப்பானுக்கு இந்தியாவின் அருமண் தனிம ஏற்றுமதி

- ஜப்பானுக்கு மேற்கொள்ளப்படும் அருமண் தனிம ஏற்றுமதி தொடர்பான 13 ஆண்டு கால ஒப்பந்தத்தினை நிறுத்தி வைக்குமாறு IREL (Indian Rare Earths Limited) எனும் அரசுக்குச் சொந்தமானச் சுரங்க நிறுவனத்தினை இந்திய அரசு கோரியுள்ளது.
- குறிப்பாக மின்சார வாகன மோட்டார்களுக்கான காந்தங்களில் பயன்படுத்தப்படும் மிகவும் முக்கியப் பொருளான நியோடைமியத்தின் ஏற்றுமதியை நிறுத்துமாறு, IREL நிறுவனத்திடம் அரசாங்கம் கோரியுள்ளது.
- 2012 ஆம் ஆண்டு ஒரு அரசாங்க ஒப்பந்தத்தின் கீழ், IREL ஆனது டொயோட்சு ரேர் எர்த் இந்தியா என்ற நிறுவனத்திற்கு அருமண் தனிமங்களை வழங்குகிறது.
- சீன நாடானது, ஏப்ரல் மாதம் முதல் அதன் அருமண் பொருட்களின் ஏற்றுமதியைக் குறைத்து, அதனால் உலகளவில் வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் உயர்தொழில் நுட்ப உற்பத்தியாளர்களுக்கு நெருக்கடி அளித்துள்ளது.
- இந்தியா 6.9 மில்லியன் மெட்ரிக் டன்கள் என்ற ஒரு அளவில் உலகின் ஐந்தாவது பெரிய அருமண் இருப்புக்களை கொண்டுள்ளது.
- ஆனால் உள்நாட்டில் காந்த உற்பத்தி மேற்கொள்ளப் படுவதில்லை.
- இந்தியா இறக்குமதி செய்யப்பட்ட, முக்கியமாக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட காந்தங்களையே சார்ந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான நிதியாண்டில், இந்தியா 53,748 மெட்ரிக்

டன் அருமண் காந்தங்களை இறக்குமதி செய்தது.

❖ இந்த IREL நிறுவனமானது, கிழக்கு இந்திய மாநிலமான ஒடிசாவில் ஓர் அருமண் மீதான அகழ்ந்தெடுப்பு ஆலையையும், தென்னிந்தியாவில் கேரள மாநிலத்தில் சுத்திகரிப்புப் பிரிவையும் கொண்டுள்ளது.




## வன உரிமைகள் சட்டப் பிரிவுகள்




❖ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் வனத்தில் வசிக்கும் சமூகங்களுக்கு வன உரிமைகளை வழங்குவதற்கான சட்டத்தினைச் செயல்படுத்துவதனை "எளிதாக்கச் செய்வதற்காக" மத்திய அரசானது, ஒரு கட்டமைப்பு வழிமுறைகளுக்கு நிதியளிக்கத் தொடங்கியுள்ளது.

❖ வன உரிமைகள் சட்டமானது (FRA) 2006 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.

❖ கடந்த 19 ஆண்டுகளாக இந்த வன உரிமைகள் சட்டத்தைச் செயல்படுத்துவது மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களின் அதிகார வரம்பிற்குள் உள்ளது.

❖ தார்தி அபா ஜன்ஜாதிய கிராம் உத்கர்ஷ் அபியான் (DAJGUA) திட்டத்தின் கீழ், மத்தியப் பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் ஆனது இது வரை 18 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் வன உரிமைகள் சட்டத்தைச் செயல்படுத்தும் 324 மாவட்ட அளவிலான வன உரிமைகள் சட்டப் பிரிவுகளை உருவாக்க அனுமதி அளித்துள்ளது.

- மேலும் கூடுதலாக இவற்றில் 17 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மாநில அளவிலான வன உரிமைகள் சட்டப் பிரிவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- 55 பிரிவுகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளதுடன் இது வரையில் அனுமதிக்கப்பட்ட மாவட்ட FRA பிரிவுகளில் அதிக எண்ணிக்கையிலானவை மத்தியப் பிரதேசத்தில் உள்ளன.
- இதைத் தொடர்ந்து அவை சத்தீஸ்கரில் (30), தெலுங்கானாவில் (29), மகாராஷ்டிராவில் (26), அசாமில் (25) மற்றும் ஜார்க்கண்டில் (24) உள்ளன.
- FRA அமலாக்கத்தினை விரைவுபடுத்துவதற்காக இது போன்ற FRA பிரிவுகளை மத்திய அரசு முன்மொழிவது இதுவே முதல் முறையாகும்.
- ஒடிசா அரசானது, இரண்டு ஆண்டுகளாக இதே போன்ற வழிமுறையைப் பயன்படுத்தி வருகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## காசா போர் நிறுத்த தீர்மானம் 2025




- காசாவில் போர் நிறுத்தத்திற்கான ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் முன் வைக்கப் பட்ட தீர்மானத்தின் போது இந்தியா வாக்களிப்பதில் இருந்து விலகியது.
- ஆனால் 149 நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்ததால், பெரும் ஆதரவுடன் அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய அமெரிக்க நட்பு நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், வாக்களிக்காத 19 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது.
- அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் 10 நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன.
- தெற்காசியா, பிரிக்ஸ் மற்றும் SCO ஆகிய அமைப்புகளின் உறுப்பினர் நாடுகளுள் வாக்களிப்பில் இருந்து விலகிய ஒரே நாடாக இந்தியா தனித்து நிற்கிறது.

- இந்தியா முதலில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மற்றும் பின் ஓராண்டு காலம் கழித்து அதே மாதத்தில் என இரண்டு முறையில் UNGA காசா மீதான போர் நிறுத்தத் தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி





- இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் தேயிலையின் ஏற்றுமதியானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையில் 9.92 சதவீதம் அதிகரித்து 254.67 மில்லியன் கிலோவாக இருந்தது.
- இது முந்தைய ஆண்டில் 231.69 மில்லியன் கிலோவாக இருந்தது.
- தென்னிந்தியாவில், 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை உற்பத்தி அளவு 99.86 மில்லியன் கிலோவாக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டின் முந்தைய ஆண்டில் 90.69 மில்லியன் கிலோவாக இருந்தது என்பதோடு இது ஆண்டிற்கு 10.11 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி

- குஜராத் மாநிலத்தின் முன்னாள் மாநில முதல்வர் விஜய் ரூபானி, அகமதாபாத்தில் நடைபெற்ற மிகத் துயரமான ஏர் இந்தியா போயிங் 787-8 ட்ரீம்லைனர் விபத்தில் உயிர் இழந்தார்.
- அவர் 1987 ஆம் ஆண்டு ராஜ்கோட் மாநகராட்சிக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பதோடு பின்னர் 1996 முதல் 1997 ஆம் ஆண்டு வரையில் ராஜ்கோட்டின் மேயராக பணியாற்றினார்.
- அவர் 2006 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்திற்கு மாநிலங்கள் அவையில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- அவர் 2014 முதல் 2022 ஆம் ஆண்டு வரை குஜராத் சட்டமன்ற உறுப்பினராகப் பணி ஆற்றினார்.
- 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று, ரூபானி குஜராத்தின் முதலமைச்சராக நியமிக்கப் பட்டு 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பணியாற்றினார்.




## ஆர்டர் ஆஃப் மகரியோஸ் III




- சைப்ரஸ் பயணத்தின் போது இந்தியப் பிரதமர் சைப்ரஸ் குடியரசின் மிகவும் உயரிய குடிமை விருதான கிராண்ட் கிராஸ் ஆஃப் ஆர்டர் ஆஃப் மகரியோஸ் III விருதினைப் பெற்றார்.
- இது சைப்ரஸின் முதல் அதிபரான பேராயர் மகரியோஸ் III அவர்களின் பெயரால், அந்த நாட்டு அரசினால் வழங்கப்படும் விருதாகும்.

- மத்தியத் தரைக் கடல் பகுதியைச் சேர்ந்த இந்த நாட்டிற்கு ஒரு இந்தியப் பிரதமர் மேற் கொண்ட முதல் பயணம் இதுவாகும்.
- 1962 ஆம் ஆண்டில் இந்த நாடுகளுக்கிடையே அரசு உறவுகள் நிறுவப்பட்டதிலிருந்து இந்தியாவும் சைப்ரஸும் பாரம்பரியமாக வலுவான அரசு முறை உறவுகளைப் பேணி வருகின்றன.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினரான சைப்ரஸ், அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனத்தின் 'சுழற்சி முறையிலான தலைமைப் பொறுப்பை' ஏற்க உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★